உலக சோசலிச வலைத் தளம் www.wsws.org

# பிரான்ஸ் இராணுவ செலவினங்களை அதிகரிக்க தயாரிப்பு செய்கிறது

**By Kumaran Ira, 2 April 2015**

பிரான்சின் சோசலிஸ்ட் கட்சி அரசாங்கம் (PS) அதன் மறுதிருத்தம் செய்யப்பட்ட இராணுவ மூலோபாயத்தை வரைந்துள்ள நிலையில், ஒரு பிரதான இராணுவ தீவிரப்படுத்தலுக்கு அது தயாரிப்பு செய்து வருகிறது. இராணுவ வரவு-செலவு திட்டத்தை மீளாய்வு செய்ய, கடல்கடந்த இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த மற்றும் ஜனவரியில் நடந்த பாரிய *சார்லி ஹெப்டோ* துப்பாக்கி சூட்டிற்குப் பின்னர் பிரான்ஸ் எங்கிலும் நிலைநிறுத்தப்பட்ட துருப்புகளை நிரந்தரமாக பேணுவதற்காக, அந்த அரசாங்கம் சமீபத்தில் ஒரு பாதுகாப்புக் குழுவை ஏற்படுத்தி இருந்தது.

ஆயுதப் படைகளுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளை அவை பெறுவதை உறுதிப்படுத்தும் வகையில், 2014-2019 இராணுவ வேலைத்திட்ட சட்டம் (Military Program Law -LPM) மீதான ஒரு மீளாய்வு கோடையில் நடத்தப்படுமென அரசாங்கம் தெரிவித்தது. "LPM க்கு அவசியமான நிதியாதாரங்களைப் பாதுகாக்க" வேண்டியதன் அவசியத்தை பாதுகாப்பு மந்திரி ஜோன்-ஈவ் லு திரியோன் வலியுறுத்தினார்.

உள்நாட்டிலும் மற்றும் அன்னிய நாடுகளிலும் இராணுவ பிரசன்னத்தைப் பேணுவதற்காக, இராணுவத்தில் 2019 வாக்கில் காலியாகவுள்ள சுமார் 23,000 பதவிகள் மீண்டும் நிரப்பப்பட்டு வருகின்றன. காத்திருப்போர் பட்டியலில் இருப்பவர்களை 28,000 இல் இருந்து 40,000 ஆக உயர்த்துவது, இணையவழி போர்முறை நடவடிக்கைகளை விரிவுபடுத்துவது மற்றும் கூடுதலாக 500 உளவுத்துறை வல்லுனர்களை நியமிப்பது ஆகியவையும் பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளில் உள்ளடங்கும்.

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வழங்குவதற்கு ஆளும் வர்க்கத்திடம் ஒன்றுமில்லை என்ற நிலைமைகளின் கீழ், அது தீவிரப்படுத்திவரும் ஏகாதிபத்திய போர்களில் அவர்களைப் போர்க்கள பலிக் படைகளாக (cannon fodder) பயன்படுத்த தயாரிப்பு செய்து வருகிறது. பிரான்சினது கடல்கடந்த பிராந்தியங்களின் இராணுவ சேவையை, அரசாங்கம் தகுதி குறைந்த இளைஞர்களுக்காக ஊக்குவித்து வருகிறது. "2015 இலையுதிர்காலத்திற்குள்" இராணுவத்தில் சுமார் ஓராயிரம் பதவிகள் நிரப்பப்படுமென செய்திகள் அறிவிக்கின்றன.

பிரான்சிற்குள் நிரந்தரமாக இராணுவ கட்டமைப்பைச் செய்யும் திட்டங்கள், அதிகரித்துவரும் சமூக அதிருப்தியின் மீது அரசியல் ஸ்தாபகத்தின் ஆழ்ந்த கவலைகளை அடிக்கோடிடுகிறது. அதன் சிக்கன கொள்கைகள் மற்றும் மக்கள்விரோத போர்களால் மதிப்பிழந்துள்ள பிரெஞ்சு ஆளும் மேற்தட்டு, சமூக அதிருப்தியை ஒடுக்கவும் மற்றும் பீதியூட்டுவதற்கும் வடிவமைக்கப்பட்ட பொலிஸ்-அரசு நடவடிக்கைகளை வேகமாக விரிவுபடுத்தி வருகிறது.

மறுதிருத்தம் செய்யப்பட்ட இராணுவ மூலோபாயத்தின் பாகமாக, *சார்லி ஹெப்டோ* பத்திரிகை அலுவலகங்கள் மீதான ஜனவரி 7 தாக்குதலுக்குப் பின்னர், பிரான்ஸ் எங்கிலும் நிலைநிறுத்தப்பட்ட சுமார் 10,000 துருப்புகள் காலவரையின்றி பேணப்படுமென ஜனாதிபதி பிரான்சுவா ஹோலாண்ட் உறுதிப்பட தெரிவித்தார். அரசாங்கம் ஒரேநேரத்தில் அன்னியநாடுகளிலும் பிரான்சிற்குள்ளும் இந்தளவிற்கு துருப்புகளை நிலைநிறுத்துவது இதுவே முதல்முறையாகும்.

எலிசே ஜனாதிபதி மாளிகையிலிருந்து வெளியான ஓர் அறிக்கையின்படி, "நமது நாட்டிற்கு எதிராக உயர்ந்தளவில் ஒரு பயங்கரவாத தாக்குதலுக்கான அச்சுறுத்தல் நிலவுகிறது, ஆகவே உள்துறை அமைச்சகத்தின் தலைமையில் பாதுகாப்பு படைகளைப் பலப்படுத்த, நமது நாட்டிற்குள் நிலைநிறுத்தப்பட்ட 10,000 துருப்புகளை தக்க வைக்க அரசு தலைமை முடிவு செய்துள்ளதென" அறிவித்தது.

சுகாதாரம் மற்றும் கல்வி உட்பட அத்தியாவசிய பொதுச்சேவைகளுக்கு பணம் இல்லை என்று வாதிட்டுக் கொண்டே, அரசாங்கம் நாடுதழுவிய பாதுகாப்பு நடவடிக்கையில், ஆபரேஷனல் சென்டினெல் (Opération Sentinelle) என்பதில், துருப்புகளை ஒன்றுதிரட்டுவதற்காக நாளொன்றுக்கு சுமார் ஒரு மில்லியன் யூரோ செலவிட்டு வருகிறது.

உலகளாவிய வல்லரசுகளுக்கு இடையே புவிசார் அரசியல் பதட்டங்கள் கூர்மை அடைந்துவருவதற்கு இடையே, இந்த மறுதிருத்தம் செய்யப்பட்ட இராணுவ மூலோபாயம் கொண்டு வரப்படுகிறது. கடந்த பெப்ரவரியில் பாசிச-தலைமையிலான நேட்டோ-ஆதரவு ஆட்சிக்கவிழ்ப்புக்குப் பின்னர் உக்ரேன் விவகாரத்தில் ரஷ்யாவுடனான மோதல், அணுஆயுத போரை அச்சுறுத்தி உள்ளது. "ஆசியாவை நோக்கிய முன்னெடுப்பின்" கீழ், சீனாவை நோக்கி அமெரிக்கா ஒரு போர் முனைவை ஊக்குவித்து வருகிறது. ஒரு பரந்த மீள்இராணுவமயமாக்கும் நடவடிக்கைக்கு இடையே, இதன் மிகவும் அதிர்ச்சியூட்டும் அம்சமாக ஜேர்மன் ஏகாதிபத்தியத்தின் இராணுவ அபிலாஷைகள் புத்துயிர் பெற்றிருக்கும் நிலையில்,

ஐரோப்பாவிற்குள் ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான பதட்டங்களும் வெடித்து வருகின்றன.

பிரெஞ்சு ஆளும் வர்க்கம் ஜேர்மன் இராணுவத்தின் உயர்வை பதட்டத்துடன் பார்த்து வருகிறது. ஜேர்மனி பாதுகாப்பு செலவினங்களை 2019 வாக்கில் 35 பில்லியன் யூரோவிற்கு கூடுதலாக அதிகரிக்கும் நோக்கத்துடன், பரந்தமுறையில் இராணுவத்தை நவீனப்படுத்தும் நோக்கில், அடுத்த ஐந்தாண்டுகளில் 6.2 சதவீதம் அளவிற்கு அதன் பாதுகாப்பு வரவு-செலவு திட்டத்தை உயர்த்த திட்டமிட்டுள்ளது. 2010-2014 க்கு இடையே, பேர்லின் பாதுகாப்பு செலவினங்களை ஏழு சதவீதம், 32.4 பில்லியன் யூரோவிற்கு, உயர்த்தி உள்ளது. அதேவேளையில் பிரெஞ்சு பாதுகாப்பு செலவினங்களோ அதே காலகட்டத்தில் 2.5 சதவீதம், 31.4 பில்லியன் யூரோவாக, வீழ்ச்சி அடைந்துள்ளது.

பிரெஞ்சு ஆளும் வர்க்கம் அதன் சொந்த மீள்ஆயுதமயப்படுத்தலை அதிகரிப்பதன் மூலமாக எதிர்வினையாற்றி வருகிறது. இராணுவ வரவு-செலவு திட்டக்கணக்கை வெட்டுவதென்ற அரசாங்கத்தின் கடந்த ஆண்டு முடிவை உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் பகிரங்கமாக கண்டித்திருந்த நிலையில், இராணுவ மூலோபாயத்தை மறுதிருத்தம் செய்யும் ஹோலாண்டின் இந்த முடிவு வருகிறது. அதே நேரத்தில், சோசலிஸ்ட் கட்சியின் திவால்நிலைமையிலிருந்து ஆதாயமடைந்து வரும் நவ-பாசிசவாத தேசிய முன்னனி (FN), இராணுவத்திற்கு அரசியல் முறையீடுகளைச் செய்து, பிரான்சின் மீள்ஆயுதமயப்படுத்தலுக்கு அழைப்புவிடுத்து வருகிறது.

இராணுவ வரவு-செலவு திட்டக்கணக்கை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டு சதவீதமாக வைக்க வலியுறுத்தியும் மற்றும் பாதுகாப்பு செலவினங்களை காலவரையறையின்றி ஆண்டுக்கு 2 பில்லியன் யூரோ அளவிற்கு உயர்த்துவதற்கு வலியுறுத்தியும், தேசிய முன்னனி தலைவர் மரீன் லு பென் பாதுகாப்பு வரவு-செலவு திட்டக்கணக்கில் வெட்டுக்களை நிறுத்துமாறு அழைப்புவிடுத்துள்ளார். (பார்க்கவும்: பிரெஞ்சு ஏகாதிபத்தியம் மீண்டும் ஆயுதமேந்துவதற்கு நவ-பாசிச தேசிய முன்னணி அழைப்புவிடுக்கிறது)

இந்த மீள்ஆயுதமயப்படுத்தும் கொள்கை தொழிலாள வர்க்கத்திற்கு ஓர் எச்சரிக்கையாகும். இராணுவ தீவிரப்படுத்தல்களுக்கு செலவிடுவதற்காக, தொழிலாளர்களின் சமூக உரிமைகள் மற்றும் வாழ்க்கை நிலைமைகள் கொள்ளையடிக்கப்படுகின்ற நிலையில், ஐரோப்பிய முதலாளித்துவமோ கடந்த நூற்றாண்டில் இரண்டு முறை உலக போருக்குள் அக்கண்டத்தை மூழ்கடித்துள்ள ஐரோப்பிய சக்திகளுக்கு இடையே ஒருவிதமான ஆயுத போட்டிக்கு தயாரிப்பு செய்து வருகிறது.

பொருளாதார வீழ்ச்சி மற்றும் அதிகரித்துவரும் வர்த்தக பற்றாக்குறையை முகங்கொடுத்து வருகின்ற பிரெஞ்சு ஏகாதிபத்தியம், இராணுவ வழிவகைகளைக் கொண்டு அதன் நெருக்கடியைக் கடந்துவர பார்க்கிறது. மத்திய கிழக்கில் அமெரிக்க தலைமையிலான போரில் பங்குபற்றி வரும் பிரான்ஸ், அதன் முன்னாள் காலனி செல்வாக்கு மண்டலங்களை மறுஸ்தாபிதம் செய்யும் நோக்கில், மாலி மற்றும் மத்திய ஆபிரிக்க குடியரசு உட்பட, ஆபிரிக்காவில் இராணுவ நடவடிக்கைகளை நடத்தி வருகிறது.

மறுதிருத்தம் செய்யப்பட்ட மூலோபாயத்தின் கீழ், அன்னியநாட்டு நடவடிக்கைகளுக்காக 10,000 துருப்புகள் ஒன்றுதிரட்டப்படும். அரசாங்கம் ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கில் அதன் இராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்த திட்டமிடுகிறது. மத்திய ஆபிரிக்க குடியரசின் சான்காரிஸ், மரிதானியாவில் பார்கானே, மாலி, பர்கினா பாசோ, நைஜர் மற்றும் சாட் (Chad), ஈராக்கில் சம்மல் உள்ளடங்கிய பிரதான இராணுவ நடவடிக்கைகளில் தற்போது பிரான்ஸ் ஈடுபட்டுள்ளது.

ஆபிரிக்க சாஹெல் பிராந்தியத்தில் பிரெஞ்சு துருப்புகளை அதிகரிக்கவும் சோசலிஸ்ட் கட்சி அரசாங்கம் தயாரிப்பு செய்து வருகிறது. சுமார் 3,000 பிரெஞ்சு துருப்புகள் அப்பிராந்தியத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. ஜிஹாதிஸ்ட்-விரோத பார்கானே நடவடிக்கையில் பங்குபற்றிவரும் துருப்புகளின் எண்ணிக்கையை பிரான்ஸ் "சற்றே அதிகரிக்கும்" என்றும், போக்கோ ஹரம் எதிரான சண்டையில் "ஒத்துழைப்பதற்கு நமக்கு வழிவகைகளை வழங்கும் வகையில்" மத்திய ஆபிரிக்க குடியரசில் சிப்பாய்கள் குறைக்கப்படுவார்கள் என்றும் லு திரியோன் தெரிவித்தார்.

துருப்புகளின் எண்ணிக்கையைத் துல்லியமாக குறிப்பிடாத போதும், லு திரியோன் கூறுகையில், போக்கோ ஹரம் எதிரான சண்டையில் தலையிடும் உள்நோக்கம் பாரீஸிற்கு இல்லை என்று தெரிவித்தார், ஆனால் "சாட், நைஜர் மற்றும் காமரூன் மண்ணில் உள்ள படைகளுக்கு தளவாட பரிவர்த்தனை உதவிகள் மற்றும் உளவுத்தகவல் ஒத்துழைப்பை வழங்க நாங்கள் பரிசீலித்து வருகிறோம்,'' என்பதையும் சேர்த்துக் கொண்டார்.

லு திரியோன் கூறுகையில், வடக்கு நைஜரில் லிபிய எல்லையருகே அமைந்துள்ள புதிய மடாமா பாலைவன படைத்தளம் ஜூலையில் முழுமையாக செயல்படத் தொடங்கும் என்றார், இது லிபியாவின் அண்டைநாடுகளிலிருந்து மாலி அல்லது நைஜீரியா உள்ளடங்கிய நாடுகளுக்கு ஆயுதங்கள் மற்றும் ஜிஹாதிஸ்டுகள் செல்வதைத் தடுப்பதற்காக என்ற போர்வையில் செய்யப்படுகிறது.

**உழைக்கும் மக்களின் ஒரே குரல் உலக சோசலிச வலைத் தளம்**

**தொடர்புகளுக்கு : editor@wsws.org**

**உலக யுத்த அபாயத்திற்கு எதிராக சோசலிச சர்வதேசிய அடித்தளத்தில் போர் எதிர்ப்பு இயக்கத்தை கட்டியெழுப்புவதற்கு போராடும் ஒரே வெளியீடு**